**செய்தி வெளியீடு எண்: 25** **நாள்:15.01.2013**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.1.2013 அன்று தேனி மாவட்டம் லோயர் கேம்ப்பில் நடைபெற்ற கர்னல் ஜான் பென்னிகுயிக் நினைவு மணிமண்டபம் திறப்பு விழா மற்றும் திருவள்ளுவர் திருநாள் – தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய விழாப் பேருரை**

---

இந்த இனிய விழாவில் வாழ்த்துரை வழங்கி அமர்ந்துள்ள மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே,

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. கே.வி. ராமலிங்கம் அவர்களே,

மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு, இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைத் துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்களே,

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, /

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே,

வரவேற்புரை நல்கிய பொதுப் பணித் துறை செயலாளர் திரு. எம். சாய்குமார் அவர்களே,

நன்றியுரை நவிலவுள்ள தமிழ் வளர்ச்சி, அற நிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மு. ராசாராம் அவர்களே,

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி அவர்களே,

அரசு அதிகாரிகளே,

காவல் துறை அதிகாரிகளே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே,

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே,

இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென் தமிழகத்தின் உயிர்நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையை பல இடையூறுகளுக்கு இடையில் தனது சொந்த பணத்தையும் செலவு செய்து அமைத்த கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் மணிமண்டபத்தினை அவரது பிறந்த நாளான இன்று திறந்து வைத்து எனது அருமை தேனி மாவட்ட மக்களாகிய உங்களிடையே உரையாற்றுவதிலும்; திருவள்ளுவர் தினமான இன்று திருவள்ளுவர் விருது உட்பட பல்வேறு விருதுகளை தமிழறிஞர்களுக்கு வழங்குவதிலும்; அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதியுதவி வழங்குவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வைகைப் படுகையில் வறட்சி ஏற்படுவதும்; இதன் காரணமாக அப்பகுதியில் பஞ்சம் ஏற்படுவதும்; வாடிக்கையாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தது. இந்த வைகை படுகைக்கு மேலே அமைந்துள்ள பெரியாறு நதியானது மேற்குத் தொடர்ச்சி மலையில் சிவகிரி மலையில் உற்பத்தியாகி, தெற்கு முகமாக சென்று கிளை நதியான முல்லையாற்றுடன் இணைந்து மேற்கு நோக்கி பாய்ந்து அரபிக் கடலில் வீணாகக் கலந்து வந்தது.

இதனையறிந்த அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம், வைகைப் படுகையில் வறட்சி ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு நதி நீரை வைகைப் படுகைக்கு திருப்பும் வகையில் ஒரு திட்டத்தை தயாரித்தது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில், ஆய்வுப் பணியை மேற்கொள்ளவும்; விரிவான ஆய்விற்குப் பிறகு வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளை தயாரித்து அறிக்கை அளிக்கவும்; திறமையான தன்னம்பிக்கையுடைய நபர் ஒருவர் தேவை எனக் கருதி, கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்தது.

இந்தப் பணியினை ஏற்றுக் கொண்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள், பெரியாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டி; அதிலிருந்து நீரை கிழக்கு முகமாக வைகைக்கு திருப்பிவிடும் வகையில், 53 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஒரு திட்ட அறிக்கையை தயாரித்து 1882 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுப்பினார்.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில், அப்போதைய திருவாங்கூர் சமஸ்தானத்துடன் பேச்சுவார்த்தையை பிரிட்டிஷ் அரசாங்கம் நடத்தியது. இறுதியாக, 1.1.1886 முதல் 999 ஆண்டுகளுக்கான ஒரு குத்தகை உடன்படிக்கை பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் இடையே 29.10.1886 அன்று ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி, ஒரு ஏக்கர் நிலத்திற்கு 5 ரூபாய் ஆண்டு வாடகை என்ற அடிப்படையில், ஆற்றின் நீர் மட்டத்திற்கு மேல் 152 அடி வரையில் நீரை தேக்கி வைக்கும் வகையில், நீர்பரப்பு பகுதியான சுமார் 8,000 ஏக்கர் நிலமும்; அணை கட்டுமானப் பணிக்காக சுமார் 100 ஏக்கர் நிலமும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு குத்தகைக்கு அளிக்கப்பட்டது.

இதனையடுத்து, 1887 ஆம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணைக் கட்டுவதற்கான பணிகள் துவக்கப்பட்டன. இந்தப் பணியினை மேற்கொள்ளும் பொறுப்பும் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வன விலங்குகள், கடும் மழை, காட்டாற்று வெள்ளம் ஆகியவற்றினால் உருவாகும் இடையூறுகளை பொருட்படுத்தாமல் மூன்று ஆண்டுகள் பணிகள் தொடர்ந்து நடைபெற்றன. அணை பாதியளவு கட்டி முடிக்கப்பட்ட சூழ்நிலையில், தொடர் மழை காரணமாக கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதில் தொய்வு ஏற்பட்டது.

இந்தத் திட்டத்தினை தொடர்வதற்கான நிதியினை குறிப்பிட்ட காலங்களில் அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் ஒதுக்கீடு செய்யவில்லை. நிதி கிடைக்காததை அறிந்த கர்னல் பென்னிகுயிக் அவர்கள் இங்கிலாந்து சென்று தனது குடும்ப சொத்துகளை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தை கொண்டு முல்லைப் பெரியாறு அணையை கட்டி முடித்துள்ளார் என்று வரலாறு நமக்கு தெரிவிக்கிறது. இதனையடுத்து, இந்த அணை 1895 ஆம் அண்டு அக்டோபர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்காக அப்போதைய சென்னை மாகாண கவர்னர் லார்டு வென்லாக் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதனால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 2.23 லட்சம் ஏக்கர் நிலங்கள் தற்போது பாசன வசதி பெற்று வருகின்றன.

எத்தகைய தடைகள் வந்தாலும், இந்த அணையை எப்படியாவது கட்டி முடிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கையுடனும், மன உறுதியுடனும், விடா முயற்சியுடனும், துணிவுடனும் கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்கள் செயல்பட்டுள்ளார் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

அந்தக் காலத்திலேயே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கட்டப்பட்ட அணைகளைப் போன்று சுண்ணாம்பு சுர்க்கி கருங்கல்லினால் புவி ஈர்ப்பு விசையின் அடிப்படையில் இந்த அணையை கர்னல் ஜான் பென்னிக்குயிக் அவர்கள் கட்டியிருக்கிறார். இதனால் தான், நில அதிர்வுகளினால் ஏற்படும் விசை போன்றவற்றை தாங்கிக் கொள்ளும் சக்தியோடு முல்லைப் பெரியாறு அணை இன்றும் உறுதியுடன் இருக்கிறது.

திரு. பென்னிகுயிக் அவர்களால் வலுவாகக் கட்டப்பட்டுள்ள இந்த முல்லைப் பெரியாறு அணை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும்; எனது ஆட்சிக் காலத்திலும்; அதாவது 1980 முதல் 1994 வரை, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் மேலும் வலுப்படுத்தப்பட்டது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அணையின் நீர்மட்டம், அதன் முழுக் கொள்ளளவான 152 அடிக்கும் மேலாக உயர்கையில், 10 மதகுகள் வழியாக ஒரு வினாடிக்கு 86,000 கன அடி நீரை வெளியேற்ற அணையில் வழிவகை

செய்யப்பட்டுள்ளது. இது தவிர, கூடுதலாக 36,000 கன அடி நீரை வெளியேற்றும் வகையில் மூன்று மதகுகள் கட்டப்பட்டுள்ளன. மொத்தத்தில் தற்போது 1,22,000 கன அடி நீரினை வெளியேற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அணையின் பாதுகாப்பினை வலுப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் முன்பு நடைபெற்ற வழக்கில் தமிழக அரசின் சார்பில் வலுவான வாதங்களும் எடுத்து வைக்கப்பட்டன. இது குறித்து மத்திய நீர்வள அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவும் தனது அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. இதன் அடிப்படையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்றும்; எஞ்சியுள்ள பணிகள் முடிவடைந்தவுடன் வல்லுநர்கள் ஆய்வு செய்த பின்னர், அணையின் முழு நீர் அளவான 152 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் 27.2.2006 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினை முடக்கும் வகையில், "கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம், 2006" என்ற ஒரு சட்டத்தினை கேரள அரசு இயற்றியது. இதன்படி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடி என நிர்ணயிக்கப்பட்டது. இந்த திருத்தச் சட்டம் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என தெரிவித்து, 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எனது உத்தரவின் பேரில் தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு அம்சங்களை பரிசீலிக்கும் பொருட்டு உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் அதிகாரம் படைத்த வல்லுநர் குழு ஒன்றை உச்ச நீதிமன்றம் 18.2.2010 அன்று நியமித்தது. இந்தக் குழுவில் தமிழ்நாடும், கேரளாவும் தங்கள் மாநிலங்களின் சார்பாக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர்களை நியமித்தன.

இந்த அதிகாரம் படைத்த குழு, முல்லைப் பெரியாறு அணை பகுதி மற்றும் பரிசோதனைக் கூடங்களில் பல்வேறு ஆய்வு மற்றும் சோதனைகளை மத்திய நீர் ஆணையம்; மத்திய நீர் மற்றும் மின்சார ஆராய்ச்சி நிலையம்; இந்திய புவியியல் அளவைத் துறை; மற்றும் மத்திய மண் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் சேவைகளைப் பயன்படுத்தி; அவற்றின் அறிக்கைகளின் அடிப்படையில், தனது அறிக்கையை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில், முல்லைப் பெரியாறு அணை வலுவாக உள்ளது என்றும்; ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் அனுமதித்தபடி அணையின் நீர் மட்டத்தை 142 அடிக்கு உயர்த்திக் கொள்ளலாம் என்றும்; எஞ்சிய பணிகளை முடித்த பின்னர் அணையின் முழு அளவான 152 அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில், உச்ச நீதிமன்றம் தமிழகத்திற்கு சாதகமான தீர்ப்பினை வழங்கும் என நான் நம்புகிறேன்.

இது மட்டுமல்லாமல், முல்லைப் பெரியாறு அணையை பாதுகாக்கும் பொருட்டு மத்திய தொழிற் பாதுகாப்புப் படையை அந்தப் பகுதிக்கு உடனடியாக மத்திய அரசு அனுப்ப வேண்டும் என்றும்; உச்ச நீதிமன்ற தீர்ப்பினை ஏற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு ஏதுவாக, 2006 ஆம் ஆண்டு, கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டத்தில் உரிய திருத்தங்களை கேரள அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும்; அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த, எஞ்சியுள்ள நீண்டகால அணைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள கேரள அரசு, தமிழகத்திற்கு தடை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்றும்; எந்தச் சூழ்நிலையிலும், தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்றும், 15.12.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றினேன்.

வழக்கம் போல இந்தத் தீர்மானத்தின் மீதும் மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள கேரள அரசு தடை ஏற்படுத்திய காரணத்தால், உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசு மனுத் தாக்கல் செய்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் பராமரிப்புப் பணிகளை தமிழக அரசு

மேற்கொள்ள தடை ஏற்படுத்தக் கூடாது என தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினையடுத்து, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களிடம் இருந்த துணிச்சல், மன உறுதி மற்றும் தன்னம்பிக்கை காரணமாகத்தான் முல்லைப் பெரியாறு அணையை அவரால் கட்ட முடிந்தது.

திருமணமான பெண் ஒருத்தி தன் தாயாரைத் தேடி வந்தாள். அவளுடைய முகம் வருத்தமுற்றிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

தாயார் தன் மகளைப் பார்த்து, "என்ன விஷயம்?" என்று விசாரித்தார்.

மகள் தன்னுடைய கஷ்டங்களை எல்லாம் ஒவ்வொன்றாக தயாரிடம் சொன்னாள். "இவற்றிலிருந்து எப்படி விடுபடப் போகிறேன் என்று தெரியவில்லை'' என்று கூறி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள் மகள்.

இவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட தாயார், தன் மகளை சமையலறைக்கு அழைத்துச் சென்றார். மூன்று பாத்திரங்களில் தண்ணீரை ஊற்றி, எரியும் அடுப்பிலே அதையெல்லாம் எடுத்து வைத்தார். சிறிது நேரத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது. ஒரு பாத்திரத்திலே கேரட்டை எடுத்துப் போட்டார். மற்றொரு பாத்திரத்தில் முட்டையை போட்டார். இன்னொரு பாத்திரத்தில் கொஞ்சம் காப்பித்தூளை போட்டார்.

அந்தப் பெண்ணுக்கு எதுவும் புரியவில்லை. இருந்தாலும் அமைதியாக கவனித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில், அந்தப் பாத்திரங்களை கீழே இறக்கி வைத்தார் தாயார். கேரட்டையும், முட்டையையும் எடுத்து வெளியே வைத்தார். காபியையும் ஒரு கோப்பையிலே ஊற்றினார்.

"மகளே இதெல்லாம் என்ன என்று தெரிகிறதா?" என்று கேட்டார் தாயார்.

அதற்கு "அது கேரட், அடுத்தது முட்டை, இது காப்பி" என்று கூறினாள் மகள்.

"சரி, கேரட்டை தொட்டுப் பார் எப்படியிருக்கு?" என்று கேட்டார் தாயார். தொட்டுப் பார்த்து, "ரொம்ப மென்மையாக இருக்கு" என்று கூறினாள் மகள்.

"முட்டையைத் தொட்டுப் பார்த்து எப்படியிருக்கு என்று சொல்" என்று கூறினார் தாயார்.

"கொஞ்சம் கடினமாக இருக்கிறது" என்று சொன்னாள் மகள்.

அடுத்தபடியாக "காப்பியை எடுத்து குடி" என்றார் தாயார். காபியை குடித்துவிட்டு, "ரொம்ப சுவையாக இருக்கிறது'' என்று கூறினாள் மகள்.

"எதற்கு இந்த வேடிக்கை ?" என்று தாயிடம் வினவினாள் மகள்.

அதற்கு பதில் அளித்த தாய், "மகளே கொஞ்ச நேரத்திற்கு முன்பு இந்த மூன்று பொருள்களையும் ஒரே மாதிரி தண்ணீரில் தான் கொதிக்க வைத்தோம். ஒரே நேரத்தில் கீழே இறக்கி வைத்தோம். ஆனால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது.

"இந்தக் கேரட் ஆரம்பத்திலே எவ்வளவு கடினமாக இருந்தது ? ஆனால் தண்ணீரில் கொதிக்க வைத்தவுடன் தன்னுடைய இயல்புக்கு நேர்மாறாக மென்மையானதாக மாறிவிட்டது''.

''இந்த முட்டைக்குள்ளே திரவ நிலையிலே இருந்த கரு கொதிக்க வைத்ததும் கடினமாக ஆகிவிட்டது''.

''காப்பியைப் பார். அது அந்த தண்ணீரையே சுவை மிக்க பானமாக மாற்றிவிட்டது''.

"மகளே, வாழ்க்கையில் கஷ்டங்கள் என்பது இப்படி கொதிக்க வைக்கிற மாதிரி தான். இதை நாம் எந்த ரூபத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதில் தான் விஷயமே இருக்கிறது." என்று கூறினார் தாய்.

உடனே மகள் முகத்தில் தெளிவு பிறந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். கவலை மறந்து போய்விட்டது. பறந்து போய்விட்டது. முகத்தில் தெளிவு பிறந்தது.

எந்த நிலைமையையும் சந்திப்பதற்கு, சமாளிப்பதற்கு உரிய துணிச்சல், மன உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

இதைத்தான் முல்லைப் பெரியாறு அணை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

இந்த முல்லைப் பெரியாறு அணையைவிட மிகவும் பழமை வாய்ந்த அணை கொள்ளிடம் ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள கல்லணை. 2000 ஆண்டுகளுக்கு முன்பு கரிகால் சோழனால் கட்டப்பட்டு இன்றளவும் கோடானு கோடி மக்களுக்கு பயனளித்துக் கொண்டிருக்கும் இந்த அணை ஒரு பொறியியல் அற்புதம் ஆகும். இந்தியாவில் தற்போது புழக்கத்தில் இருக்கும் அணைகளில் கல்லணையே மிகவும் பழமை வாய்ந்தது. இப்படிப்பட்ட உறுதியான அணையை உருவாக்கிக் கொடுத்த கரிகால் சோழனின் சேவையை நினைவு கூர்ந்து போற்றும் வகையிலும்; கௌரவிக்கும் வகையிலும்; ஒரு மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று திருவள்ளுவர் தினம். மனிதவாழ்வுக்கு திருக்குறள் மூலம் நல்வழி காட்டியவர் திருவள்ளுவர். நாடு, மதம், மொழி கடந்து நல்வழி காட்டும் உலகப் பொதுமறை நூலாக திருக்குறள் விளங்குகிறது. அறம், பொருள், இன்பம் என்ற வாழ்வின் அடிப்படையான கருத்துகளுக்கு விளக்கம் அளிப்பதே திருக்குறள். இரண்டே வரிகளில் இருந்தாலும், அதனுள் உலகையே அடக்கி நிற்கும் ஆற்றல் படைத்தது திருக்குறள். திருக்குறளில் திருவள்ளுவர் கூறிய கருத்துகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவையாக விளங்குகின்றன. இதனால் தான், ‘‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு’’ என்று பாடினார் மகாகவி பாரதியார்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் தின நன்னாளில், எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள் என்ற திருவள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, முல்லைப் பெரியாறு அணையினை உருவாக்கிய கர்னல் பென்னிகுயிக் அவர்களின் மணிமண்டபத்தை திறந்து வைத்ததில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இந்த விழாவிற்கு கர்னல் பென்னிகுயிக் அவர்களுடைய கொள்ளுப் பேரன் Thiru W. Stuart Sampson அழைக்கப்படுவார் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். அதன்படி இந்த விழாவில் மாநில அரசின் விருந்தினராக கலந்து கொள்ளுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இருப்பினும், தவிர்க்க முடியாத காரணங்களால் அவரால் இந்த விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜான் பென்னிகுயிக் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், தற்போது தேனி நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு ‘‘கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையம்’’ என்று பெயர் சூட்டப்படும் என்பதை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் திருவள்ளுவரின் காலத்தால் அழியாத திருக்குறளை அழித்துவிட்டு, தன்னுடைய வாசகங்களை எழுத வைத்த திரு. கருணாநிதி, கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை சரியாக பராமரிக்கப்படவில்லை என இல்லாத ஒன்றைக் கூறி, அதற்காக போராட்டம் நடத்தப் போவதாக கூறி இருந்தார். நான் திரு. கருணாநிதிக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளுவர் பெயரில் விருதை அறிமுகப்படுத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. திருக்குறளை தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானத்தை இயற்றியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. திருவள்ளுவர் பெயரில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான்.

இன்னும் சொல்லப்போனால், கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு அருகிலுள்ள பாறையில் திருவள்ளுவர் சிலை ஒன்றினை நிறுவ முடிவெடுத்து, அப்போதைய பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களால், அப்போதைய முதலமைச்சர் புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில் 15.4.1979 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர், பாறையின் தன்மை, சிலையின் வடிவமைப்பு, அதை நிறுவுவது பற்றிய திட்டங்கள், மதிப்பீடு போன்ற பல்வேறு அம்சங்களை விரிவாக ஆராய்ந்து ஓர் அறிக்கையினை சமர்ப்பிக்க நிபுணர் குழு அமைக்கப்பட்டதும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான். எனது முதல் ஆட்சிக் காலத்தில் 1 கோடியே 28 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இந்த சிலை அமைக்கும் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டது. இதனை வைத்து, திரு. கணபதி ஸ்தபதி அவர்கள் ஓரளவுப் பணிகளை அப்போதே மேற்கொண்டார். உண்மை நிலை இவ்வாறிருக்க, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறப்பதற்கு தான் மட்டுமே காரணம் என்று திரு. கருணாநிதி கூறுவது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் உள்ளது. இவ்வாறு அண்டப் புளுகு புளுகுவதற்கு, தன்னை விஞ்சியவர் வேறு யாருமில்லை என்பதை திரு கருணாநிதி மீண்டும் நிரூபித்திருக்கிறார்.

திருவள்ளுவர் சிலைக்கு ரசாயனக் கலவை பூசுவது என்பது நான்கைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுவதாகும். முதன் முதலாக, எனது ஆட்சிக் காலத்தில் 2004 ஆம் ஆண்டு இப் பணி நடைபெற்றது. பின்னர் 2008 ஆம் ஆண்டு ரசாயனக் கலவை பூசப்பட்டது. தற்போது இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. உண்மை நிலை இவ்வாறிருக்க, 2011 ஆம் ஆண்டு ஆட்சி மாறிய பிறகு, ஒன்றரை ஆண்டுக் காலமாக இந்த ரசாயனக் கலவை பூசப்படவில்லை என்று திரு. கருணாநிதி கூறுவது விஷமத்தனமானது. திருவள்ளுவரைப் பற்றிய அக்கறை திரு. கருணாநிதியைவிட எனக்கு அதிகம் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்''.

அதாவது, பலரும் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்ந்துரைப்பார்கள் என்ற வள்ளுவரின் வாய்மொழியை திரு. கருணாநிதிக்கு இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த இனிய நன்னாளில், கலைமாமணி முனைவர் ந. முருகன் அவர்களுக்கு திருவள்ளுவர் விருதினையும்; பாரதிக் காவலர் திரு. கு. இராமமூர்த்தி அவர்களுக்கு மகாகவி பாரதியார் விருதினையும்; பேராசிரியர் முனைவர் திரு. சோ.ந. கந்தசாமி அவர்களுக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருதினையும்; முனைவர் திருமதி பிரேமா நந்தகுமார் அவர்களுக்கு தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதினையும்; முனைவர் நா. இராசகோபாலன் அவர்களுக்கு முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதினையும்; திரு.கே.ஆர்.பி மணிமொழியன் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா விருதினையும்; முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சிங்காரவடிவேல் அவர்களுக்கு பெருந்தலைவர் காமராசர் விருதினையும்; டாக்டர் கோ. சமரசம் அவர்களுக்கு தந்தை பெரியார் விருதினையும்; முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. பாண்டியன் அவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் விருதினையும், தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் தங்கப் பதக்கங்களையும் இந்த மேடையிலே நான் வழங்கியதிலும்; அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கியதிலும் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசின் விருதுகள் மற்றும் நிதியுதவி பெற்றவர்கள் தங்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும், நலன்களையும் பெற்று, தேக ஆரோக்கியத்துடன் நீடூழி இன்புற வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து; தமிழ் சமுதாயத்திற்கு தங்களால் இயன்ற அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**